**தமிழச்சி தங்கபாண்டியன்**

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 10.02.2023

# PRESS RELEASE

# தினை, சாமை, பட்டாணி, கடலை, உள்ளிட்ட பக்கவிளைவுகள் இல்லாத புரதச்சத்து உற்பத்தி மையங்களுக்கு ஆதரவு தேவை

## திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல்

பக்க விளைவுகள் இல்லாத புரதச்சத்து மற்றும் மாற்று புரதச்சத்து உற்பத்தி மையங்களுக்கு ஒன்றிய அரசு ஆதரவு தர வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்

இது தொடர்பாக மக்களவையில் திங்கள்கிழமை அவர் தெரிவித்த கருத்து விவரம் வருமாறு:

**பக்க விளைவுகள் இல்லாத புரதச்சத்து மற்றும் மாற்று புரதச்சத்து உற்பத்தி மையங்களுக்கு ஆதரவு அளிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா?**

உணவுப் பொருள்கள் விஷயத்தில் குறிப்பாக சர்வதேச அளவில் புதுமையைப் புகுத்த தினை, புங்கை, கடலை, சிறுதானிய பயறு வகைகள், பருப்பகள், கடற்பாசி, பட்டாணி போன்ற நமது உள்நாட்டில் உற்பத்தியாகும் தானியங்களை புரதச்சத்து மையங்களில் அதிக அளவு இடம் பெற மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் அதைப்பற்றிய விவரங்களையும்

அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாவிடில் அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சிறுதானியங்களை உற்பத்தி செய்யவும் அறுவடை செய்யவும் அறுவடைக்கு முன்பு தேவைப்படும் வேளாண் நடைமுறைகளுக்கும் தரக்கட்டுப்பாட்டுக்கும் தேவையான பயிற்சியை ஒன்றிய அரசு வழங்குகிறதா?

அதே போன்று அறுவடைக்கு முன்பு தேவைப்படும் மேலாண்மை, சந்தைப்படுத்துதல் மற்றும் கட்டமைப்புக்கு ஆதரவு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவைப்படும் வசதிகளை அளிக்க ஒன்றிய அரசு செயல் திட்டங்களை மேற்கொண்டிருந்தால் அதைப் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

**திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அளித்த பதில் விவரம் வருமாறு:**

நமது நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான செயல் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக தினை, சாமை, இதுர தானியம் சார்ந்த பக்கவிளைவுகள் இல்லாத புரதச்சத்து மற்றும் மாற்று புரதச்சத்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவும் பல்வேறு சத்துணவுப் பொருள்களின் உற்பத்தியை மேம்படுத்தவும் ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை அமைச்சகம் ஆதரவு அளித்து வருகிறது.

பிரதம மந்திரி விவசாயிகளுக்கான மானிய உதவித்திட்டம் (பிஎம்எஸ்கேஒய்) மற்றும் ஒன்றிய அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு தொழில் நிறுவனங்களை (பிஎம்எப்எம்இ) ஊக்குவிக்க மானியம் வழங்கும் திட்டம் ஆகியவை இதில் அடங்கும்

உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க உற்பத்தித் திறனுடன் இணைந்த திட்டத்தையும் ஒன்றிய அரசு

செயல்படுத்தி வருகிறது. சர்வதேசச் சந்தையில் இந்திய உணவுப் பொருள்களை பிரபலப்படுத்தவும் அவற்றிற்கான உற்பத்தியை மேம்படுத்தவும் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பி.எம்.எஃப்.எம்.இ. திட்டத்தின் 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 42 தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உணவு தானிய அறுவடைக்கு முன்பு தேவைப்படும் பணிகளுக்குத் தேவையான நடைமுறைகளை மேற்கொள்ள வேளாண் தொழில் முனைவோர்களுக்கு இதன் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 22159 பேர் இந்நிறுவனங்களில் பயிற்சி பெற்று பலன் அடைந்துள்ளனர்.

உணவு பதப்படுத்தும் தொழில் கட்டமைப்பு வசதிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் துறை அமைச்சகம் உணவுப் பொருள் சோதனை ஆய்வகத்தை மேம்படுத்தும் வகையில் அல்லது அமைக்கும் வகையில் தேவையான மானிய உதவிகளை பிரதம மந்திரி விவசாயிகள் மானிய உதவி திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 184 உணவு பொருள் ஆய்வகங்களை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகளுக்கும் கல்விப் பணிகளுக்கும் ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் துறை மானிய உதவிகளை வழங்கி வருகிறது. குறிப்பாக இந்திய அறிவியல் மற்றும் தொழில் துறை ஆய்வுக் கவுன்சில் (சிஎஸ்ஐஆர்) மற்றும் தனியார் துறையில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு திட்டங்கள் (ஆர்&டி) ஆகியவற்றுக்கு பிரதம மந்திரி விவசாயிகள் மானிய உதவித் திட்டத்தின் மூலம் அறுவடைக்கு முன்பு தேவைப்படும் செலவினங்களுக்கு மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது.

உணவு தானியப் பொருள்கள் அறுவடைக்கு முன்பு தேவைப்படும் மேலாண்மை மற்றும் இதர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொழில்

முனைவோர்களுக்குத் தேவையான உதவிகளை ஒன்றிய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் இந்திய விவசாயிகள் ஆய்வுக் கவுன்சில் (ஐசிஏஆர்) மூலம் அளித்து வருகிறது. மேலும் பல்வேறு வேளாண் நிறுவனங்களில் வேளாண்மை வர்த்தகம் சார்ந்த சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

******